விழிப்புணர்வுள்ள குடும்பம்



நிதி விழிப்புணர்வு பற்றிய கையேடு
(சிறு புத்தகம்)

நுகர்வோர் கல்வி மற்றும் பாதுகாப்பு துறை
இந்திய ரிசர்வ் வங்கி

भारतीय रिज़र्व बैंक

RESERVE BANK OF INDIA

முன்னுரை

நுகர்வோர் விழிப்புணர்வு முயற்சிகளின் ஒரு பகுதியாக, ரிசர்வ் வங்கி மார்ச் 2022ல் “அ(பா)யம் (Be (A) ware)” மற்றும் டிசம்பர் 2022ல் “ராஜுவும் நாற்பது திருடர்களும்” என இரண்டு கையேடுகளை வெளியிட்டது. இந்த கையேடுகள் மோசடிகளின் செயல் முறை குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. நிதி பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும்போது பின்பற்ற வேண்டிய முன்னெச்சரிக்கைகள் குறித்த வழிமுறைகளையும் வழங்குகிறது. பொதுமக்கள் மற்றும் பிற பயனாளர்களிடமிருந்து கையேடுகள் உற்சாக வரவேற்பைப் பெற்றன.

தற்போதைய புத்தகமான விழிப்புணர்வுள்ள குடும்பம் (‘The Alert family’) முந்தய தொடர்களின் தொடர்சியாக உள்ளது. மேலும் ராஜு அவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரின் நிதியியல் விழிப்புணர்வு நிலை பற்றி படங்களுடன் எடுத்துக் காட்டுகிறது. பல்வேறு வங்கி சேவைகள் மற்றும் வசதிகளைக் கையாளும் போது பொதுமக்களுக்கு நிதி மோசடிகளைத் தாண்டிய சில பிரச்சனைகள் மற்றும் விஷயங்களுக்கான வழிகாட்டுதல்கள் இதில் கையாளப்பட்டுள்ளன. பொதுமக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில், ஆங்காங்கே பொருந்தக்கூடிய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களையும் இந்த கையேடு வழங்குகிறது. ஒவ்வொரு கதையின் முடிவிலும் ஒவ்வொரு பொருள் குறித்தும் QR குறியீடுகள் கொடுக்கப்பட்டு, விவரமான வழிகாட்டுதல்களை அறிந்துகொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இக்கையேடு மகாத்மா காந்தி அவர்களின் வழிகாட்டும் கொள்கையை கொண்டு பின்வரும் கருத்தின் உள்ளுணர்வைப் பின்பற்றி தொகுக்கப்பட்டுள்ளது. “வாடிக்கையாளர் என்பவர் நமது வளாகத்திற்கு வருகை தரும் மிக முக்கியமான வருகையாளர் ஆவார். அவர் நம்மைச் சார்ந்து இல்லை. நாம் அவரைச் சார்ந்து இருக்கிறோம். அவர் நமது வேலைக்கு இடையூறாக இங்கு வரவில்லை. நம் வேலையின் நோக்கமே அவர்தான். அவருக்கு உபகாரம் செய்வதற்காக நாம் சேவை செய்யவில்லை. உண்மையில் அவருக்கு சேவை செய்யும் வாய்ப்பினை நமக்கு அளித்து அவர் நமக்கு உபகாரம் செய்கிறார்”.

ஓய்வுபெற்ற முதன்மை தலைமை பொது மேலாளர் & ஆர்பிஐ குறைதீர்ப்பாளர் டாக்டர். சுஷாந்த குமார் கர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், ரிசர்வ் வங்கி குறைதீர்ப்பாளர் அலுவலகம், மும்பை - II, மகாராஷ்டிரா மற்றும் கோவா குழுவின் மதிப்புமிக்க பங்களிப்புடன் இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டிருப்பதை நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

cgmcepd@rbi.org.in என்ற மின்னஞ்சலில் வாசகர்கள் தங்கள் கருத்து / பரிந்துரைகளைப் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

ஜான்கார் பனியே! சதர்க் ரஹியே!

விவரமாக இரு! எச்சரிக்கையாக இரு!

அப(ா)யம் கையேடு

ராஜுவும் நாற்பது திருடர்களும் கையேடு

அட்டவணை

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
1	மாறுபடும் கடன் விகிதம்	1
2	வீட்டுவசதிக் கடன் - காலக்கெடுவுக்கு முன் அடைத்தல் -கட்டணங்கள்	3
3	பிராந்திய மொழிகளில் கடன் ஒப்பந்த ஆவணங்கள்	5
4	இலவச கிரெடிட் கார்ட் (கடன் அட்டை)	7
5	கிரெடிட் கார்டு (கடன் அட்டை) செயலாக்கம் /முடித்தல்	9
6	வசூல் முகவர்கள்	11
7	கடன் தகவல் அறிக்கை	13
8	வாடிக்கையாளர் பொறுப்பைக் குறைத்தல்	15
9	தவறான பயனாளிக்கு (கணக்கு எண்) பண மாற்றம்	17
10	தோல்வியடைந்த பரிவர்த்தனைகளுக்கு இழப்பீடு	19
11	நேர்மறை பணம் அனுப்பும் முறைமை	21
12	(UPI123 செலுத்துகை) ஒருங்கிணைந்த பணம் அனுப்பும் தொடர்பு சேவை	23
13	அடிப்படை வங்கி சேமிப்புக் கணக்கு	25
14	இளவர்களின் (மைனர்) வங்கிக் கணக்குகள்	27
15	வங்கி டெபாசிட்டுகள் (வைப்புகள்) மீது காப்பீடு	29
16	இயக்கப்படாத கணக்குகள் மற்றும் கோரப்படாத (டெபாசிட்டுகள்) வைப்புகள்	31
17	வீட்டு வாயிலில் வங்கிச் சேவை	33
18	வங்கி அட்டைக்கு (கார்டு)டோக்கன்	35
19	கார்டு (அட்டை) குறித்த கட்டுப்பாடுகள் மற்றும் வரம்புகள்	37
20	ATM-ன் "பின்" னை அவ்வப்போது மாற்றுதல்	39
21	வாரிசுதாரர் நியமன வசதி	41
22	பாதுகாப்புப் பெட்டகங்கள் ஒதுக்கீடு	43
23	அழுக்கடைந்த / சிதைந்த கரன்சி நோட்டுகளின் பரிமாற்றம்	45

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
24	இந்திய ரிசர்வ் வங்கித் தொடர்பு மையம் இலவசத் தொலைபேசி எண் – 14448	47
25	CMS போர்ட்டலில் புகார் பதிவு செய்தல்	49

https://cms.rbi.org.in/

நபர்/பாத்திரங்களின் அறிமுகம்

ராஜு

ராஜுவின் அப்பா:
விஜய்

ராஜுவின் தாய்:
சாரதா

ராஜுவின் சகோதரன்:
பிஜு

ராஜுவின் சகோதரி:
சஞ்சு

ராஜுவின் அத்தை:
ராணி

ராஜுவின் பெரியப்பா:
அஜய்

ராஜுவின் பாட்டி:
நானி

ராஜுவின் நண்பர்:
கரண்

பிஜுவின் நண்பர்:
சரண்

1. மாறுபடும் கடன் விகிதம்

ஒரு நாள், ராஜுவும் அவனது குடும்பமும் ஒரு பெரிய வீடு தேவை என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

சாரதா: "நமது குடும்பம் விரிவடைகிறது, ஒரு பெரிய வீடு வாங்க வேண்டும் என்று ஏன் நினைக்கக்கூடாது?"

விஜய்: "நிச்சயமா அது என் மனசுல இருக்கு. என்ன சொல்றீங்க மகனே?"

பிஜு: "கண்டிப்பா அப்பா! நான் வீட்டு வசதிக் கடனுக்கு விண்ணப்பம் செய்யப் போறேன்".

சஞ்சு: "அண்ணா! நானும் நமது கனவு இல்லத்திற்கு பங்களிப்பேன். வீட்டுக் கடனுக்கான தற்போதைய வட்டி விகிதம் என்ன?".

பிஜு: "தற்போது, இது X%. இது மாறுபடும் (ப்ளோட்டிங்) வட்டி விகிதமாக இருப்பதால், எதிர்காலத்தில் கூடலாம் அல்லது குறையலாம்"

சஞ்சு: "அது எங்கே மிதக்கும் (ஃப்ளோட்டிங்)?" (தனது சகோதரனை கிண்டல் செய்தல்)

பிஜு: "ஃப்ளோட்டிங் வட்டி விகிதக் கடன்கள் (மாறுபடும் வட்டி) என்பதில் சந்தை விகிதங்களில் மாற்றம் ஏற்படும் போதெல்லாம் மாதத் தவணை(EMI) அல்லது கடன் கட்டும் காலம் மாறும். அது அதிகரிக்கலாம் அல்லது குறையலாம்".

சஞ்சு: சரி. எப்படி, எப்போது சந்தை விகிதங்கள் அதிகரிக்கும்?

விஜய்: இந்திய ரிசர்வ் வங்கி வட்டி விகிதத்தை உயர்த்திவிட்டது அதனால் வீட்டு கடனும் உயரும் என்று பொதுவாக நம்ம பையன் (ராஜு) சொல்லுவான். இது முழுவதும் உண்மை என்று எடுத்துக் கொள்ள முடியாது.

சஞ்சு: அப்படியானால், உண்மையில் வட்டி விகிதம் எதனால் பாதிக்கப் படுகிறது?

விஜய்: வங்கிகள் வட்டி விகிதங்களை பல்வேறு காரணிகளின் அடிப்படையில் நிர்ணயம் செய்கின்றன. அவர்களுக்கு நிதி கிடைப்பதற்கான விலை, கடன் வகை, கடனுக்கான காலம், இதர நடப்பு செலவினங்கள் போன்ற பலவித காரணிகள் உள்ளன. அவற்றைப் பொறுத்து வட்டிவிகிதம் அவ்வப்போது மாறுகிறது.

சஞ்சு: அது சரி. வங்கிகள் வட்டி விகிதத்தை மாற்றும் போதெல்லாம் கடனாளிகளுக்கு அதைத் தெரிவிக்குமா?

சாரதா: நிச்சயமாக. வங்கிகள் தங்கள் இணையதளத்தில் வட்டி விகித மாற்றங்களைத் தெரிவித்தபடி இருக்கும். ஆகவே அவ்வப்போது இருக்கும் வட்டி விகிதத்தையும் கடன் கணக்கு அறிக்கையையும் சீரான கால இடைவெளிகளில் படித்துப் பார்த்து சோதித்து அறிவது நல்லது.

ராஜு: ஆஹா அற்புதம்!. மக்கள் நம் குடும்பத்தை "உஷாரான குடும்பம் / விழிப்புணர்வுள்ள குடும்பம்" என்று ஏன் சொல்கிறார்கள் என்பது இப்போது எனக்குப் புரிகிறது.

2. வீட்டுவசதிக் கடன் -காலக்கெடுவுக்கு முன் அடைத்தல் - கட்டணங்கள்

ராஜூ தனது கம்பெனியில் ஓராண்டு வேலை செய்து நிறைவடைந்ததை ஒட்டி அவருக்கு போனஸ் கிடைக்கிறது.

ராஜூ: அப்பா எனக்குக் கிடைத்த போனஸ் உதவியால், வீட்டுக் கடனை அடைத்து விடலாம் என்று நினைக்கிறேன்.

விஜய்: நல்லது மகனே!
நீ இதைப் பற்றி நினைப்பது நல்லதுதான்.
ஆனால், காலக்கெடுவுக்கு முன்னால் கடனை அடைப்பதால், வங்கி, கட்டணம் ஏதும் வசூலிக்காதா?

ராஜூ: இல்லை அப்பா. நமது வீட்டுவசதிக் கடனை, மாறுபடும் வட்டி விகித அடிப்படையில் எடுத்து இருக்கிறோம். அதனால் எந்தக் கூடுதல் கட்டணமும் இல்லாமல் வீட்டுக் கடனை எளிதில் அடைக்கலாம்.

விஜய்: எப்படி?

https://cms.rbi.org.in/

ராஜு: வங்கிகள் / வங்கிசாரா நிதி நிறுவனங்கள் ஆகியவை வியாபார நோக்கத்திற்காக அல்லாமல், தனி நபர்களுக்கு வழங்கும், குறித்த கால கடன்கள் மாறுபடும் வட்டி விகிதத்தில் அமைந்திருந்தால் அத்தகு கடன்களைக் குறித்த கால கெடுவுக்கு முன் கடனாளிகள் அடைப்பதற்கு, கட்டணங்கள் ஏதும் அவர்களிடம் வசூலிக்கக்கூடாது என்று இந்திய ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

விஜய்: ஆஹா! அற்புதமான செய்தி. நாம் உடனடியாக நமது வங்கியைத் தொடர்பு கொண்டு வீட்டுக் கடனை முன் கூட்டியே அடைத்து விடுவதற்கு விண்ணப்பம் செய்வோம்.

ராஜு, விஜய் இருவரும் வங்கிக் கிளைக்குச் சென்று எந்தவிதக் கூடுதல் கட்டணம்/ அபராதம் இல்லாமல் வீட்டுக் கடனை அடைத்து விட்டனர்.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

3. பிராந்திய மொழிகளில் கடன் ஒப்பந்த ஆவணங்கள்

ஒரு நாள் சாரதா வீட்டு வேலைக்காரப் பெண் ஒரு ஆவணத்தை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்க உதவி கேட்கிறாள்.

சாரதா: இது ஒரு கம்பெனியின் கடன் ஒப்பந்தம் போல் தெரிகிறதே.

வேலைக்காரப் பெண்: ஆமாம் அக்கா. XYZ வங்கிசாரா நிதி நிறுவனத்திடம் இருந்து நான் கடன் வாங்கப் போகிறேன். அதற்கான ஒப்பந்தம் இது. கம்பெனிக்காரர்கள் இதில் நான் கையெழுத்துப் போடவேண்டும் என்று சொல்கிறார்கள். நான் எப்படி கையெழுத்துப் போடுவது? அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் அதை மொழி பெயர்த்துக் கொடுங்கள்.

சாரதா: நிச்சயமாக. ஆனால், நீ உனக்குப் புரியும் மொழியில் ஒப்பந்த ஆவணம் வேண்டும் என்று அவர்களிடம் கேட்க வேண்டும்.

வேலைக்காரப் பெண்: அந்த வங்கிசாரா நிதி நிறுவனம் (NBFC) இதைச் செய்யும் என்று நான் நினைக்கவில்லை.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

4. இலவச கிரெடிட் கார்ட் (கடன் அட்டை)

ராஜு, ஒரு நாள் தன்னுடைய சகாக்களுள் ஒருவரான கரணை சந்திக்கிறார். கரண் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்.

ராஜு: என்னப்பா ரொம்ப சந்தோஷமா இருக்கிற மாதிரித் தெரியுதே! என்ன விஷயம்!

கரண்: எனக்கு இன்னிக்கு சம்பளம் கிடைத்தது. அதோடு வாழ்நாள் முழுக்க இலவசமாக அளிக்கப்படும் XYZ வங்கிக் கிரெடிட் கார்டுக்கு ஒரு சலுகை வாய்ப்பு வந்திருக்கு. வரம்பில்லாத பரிசுப் புள்ளிகள்! கட்டணம் எதுவுமில்லை!

(கரண் தனது கைப்பேசியில் வந்த செய்தியைக் காட்டுகிறார்.)

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

5. கிரெடிட் கார்டு (கடன் அட்டை) செயலாக்கம் / முடித்தல்

சரண் XYZ வங்கியில் கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பம் செய்திருந்தார். ஒரு மாதமாகிவிட்டது. கார்டு கிடைக்கப்பெறவில்லை. ஆனால், அவருக்கு நிலுவை இருப்பதாகக் காட்டி ஒரு அறிக்கை வருகிறது. ஆகவே, தனது நண்பர் பிஜூவிடம் ஆலோசனை கேட்டு வருகிறார்.





மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

6. வசூல் முகவர்கள்

ராஜூ அவனுடைய நண்பனைப் பார்க்கப் போகிறார்..

ராஜூ: கரண் என்ன ஆச்சு உனக்கு? கவலையோட இருக்கிற மாதிரி தெரியுதே.

கரண்: ராஜு நான் ABC கம்பெனியிடமிருந்து கடன் வாங்கி, பெரிய தப்பு பண்ணிட்டேன்.

ராஜூ: ஏன் அப்படிச் சொல்ற?

கரண்: எனக்கு வேலை போயிடுச்சு. அதனால் சரியானபடி கடனைக் கட்ட முடியலை. இதனால் வசூல் முகவர்கள் இப்ப என்னையும், என் குடும்பத்தினரையும் போனில் இரவு நேரத்தில் கூட கூப்பிடறாங்க. மாதத் தவணையை உடனே கட்டச் சொல்லி மிரட்டுகிறார்கள்.



ராஜூ: இரவு நேரத்தில் போனில் கூப்பிடறாங்களா?

கரண்: ஆமாம் ராஜூ. அதுவும் இரவு 8.30 மணிக்கு பின்னர் தான். தவணை தாமதமானதுக்கு கூடுதல் கட்டணம் தருவதற்கு கூட நான் தயாராக உள்ளேன். ஆனால், தொடர்ந்து அவர்கள் எனக்கு தொல்லை தருகிறார்கள்.

ராஜு: நிதியியல் சேவைகளை வெளியார் வசம் ஒப்படைத்தல் குறித்தும், வசூல் முகவர்கள் குறித்தும் இந்திய ரிசர்வ் வங்கி தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. இது போன்று அவர்கள் நடந்து கொள்வது, இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தல்களுக்கு எதிரானது.

கரண்: அந்த விதிகள் என்னென்ன?

ராஜு: அந்த வசூல் முகவர்கள் உன்னையோ அல்லது உன் குடும்ப உறுப்பினர்களையோ துன்புறுத்தும் வகையில் எதுவும் செய்யக் கூடாது. காலை 8.00 மணிக்கு முன்னரோ, இரவு 7.00 மணிக்குப் பின்னரோ எந்தவித தொலைபேசி அழைப்பும் செய்யக்கூடாது.

கரண்: உண்மையாவா சொல்ற?

ராஜு: ஆமாம் கரண். நீ உடனடியாக ABC கம்பெனிமேல் ஒரு புகாரைப் பதிவு பண்ணு. அதுக்கு 30 நாட்களுக்குள் பதில் கிடைக்கவில்லை அல்லது திருப்தியான பதில் கிடைக்கவில்லை என்றால், இந்திய ரிசர்வ் வங்கியின் குறைதீர்ப்பு அலுவலகத்திற்கு https://cms.rbi.org.in தொடர்பில் புகாரைப் பதிவிடுங்கள்.

கரண்: மிக்க நன்றி ராஜு. இன்றே நான் ABC கம்பெனி மேலே புகார் பதிவு செய்கிறேன்.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

7. கடன் தகவல் அறிக்கை

பிஜு ABC வங்கியின் அலுவலர். அவருடைய நண்பர் சரண் வங்கிக்கு வந்து தனது தனிநபர் கடன் விண்ணப்பம் பற்றி விசாரிக்கிறார்.

சரண்: அது என்ன அறிக்கை?

சரண்: நான் யாரை அணுக வேண்டும்?



மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

8. வாடிக்கையாளர் பொறுப்பைக் குறைத்தல்

கரண் மனம் நொந்த நிலையில் தெருவில் நடந்து கொண்டிருந்தார்.
ராஜூ கடந்து போனதைக் கூட கவனிக்கவில்லை. ராஜூ குழம்பியபடி,
கரனைப் பார்த்து அருகில் போகிறார்.

ராஜூ: கரண் என்னவாயிற்று? பதட்டமும் கவலையுமாகத் தெரிகிறாய்.

கரண்: ராஜூ என்னுடைய வங்கி அட்டையிலிருந்து ரூ.60,000 (செலவு) பற்று வைக்கப்பட்டதாக குறுஞ்செய்தி வந்துள்ளது. நான் எந்தப் பரிவர்த்தனையும் செய்யவில்லை. என்னுடைய அட்டை விவரங்களையும் யாரிடமும் சொல்லவில்லை. இப்போதுதான் இந்த குறுஞ்செய்தி வந்தது. எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

ராஜூ: கரண் கவலைப்படாதே! இதில் உனது தவறு எதுவும் இல்லையென்றால், உனது தனிநபர் பணம் அனுப்பும் தகவலகள் எதையும் எவரிடமும் பகிர்ந்து கொள்ளவில்லை என்றால், உனக்கு எந்த நஷ்டமும் ஏற்படாது.

கரண்: எப்படி ராஜூ? என் பணம்தான் போய்விட்டதே.

ராஜூ: உன்னுடைய வங்கிக்கு அந்தக் குறுஞ்செய்திக்குப் பதில் கூறுவதுபோல மூன்று வேலை நாட்களுக்குள் பதில் அனுப்பிவிடு அல்லது வாடிக்கையாளர் சேவைப் பிரிவிற்குத் தகவல் கொடுத்துவிடு அல்லது ஆன்-லைன் மூலமாகவும் புகார் தரலாம்.

கரண்: ராஜூ நீ நல்ல புத்திசாலி.. மிக்க நன்றி. இது பற்றி உடனடியாக என்னுடைய வங்கிக்குப் புகார் தருகிறேன்.

ராஜூ: எனக்கு நன்றி சொல்லாதே. அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கிப் பரிவர்த்தனைகளில் வாடிக்கையாளர்களின் இழப்பில் பொறுப்பினைக் குறைப்பது குறித்து வாடிக்கையாளர் பாதுகாப்பிற்காக ஒரு சுற்றறிக்கையை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது. அதை படித்துப் பார்.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின்
https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

https://cms.rbi.org.in/

9. தவறான பயனாளிக்கு (கணக்கு எண்) பண மாற்றம்

வங்கி அலுவலராக இருக்கும் பிஜூ தனது நண்பர் சரணின் திருமண வரவேற்புக்குச் செல்கிறார். சரண் வரவேற்பு விழாவிற்குத் தயாராவதில் மும்முரமாக இருக்கிறார்.

சரண்: எனக்கு ஒரு உதவி செய்வாயா? இவ்விழா நிகழ்ச்சியை நடத்தும் மேலாளருக்கு, ஏற்பாடுகள் செய்த செலவுக்கு ரூ. 89000/- அனுப்பவேண்டும். ஆன்-லைனில் பண மாற்றம் செய்து தருகிறாயா?

(சரண் பணம் செலுத்தப்பட வேண்டிய வங்கிக் கணக்கு எண், விவரங்கள் எழுத்தப்பட்ட காகிதத்தை பிஜூவிடம் கொடுக்கிறார்.)

பிஜூ: நிச்சயமாக. ஆனால், இதில் வங்கிக் கணக்கு எண் தெளிவாக இல்லையே. கடைசி எண் 5ஆ அல்லது 4ஆ என்பது தெளிவாக இல்லை.

சரண்: பரவாயில்லை. xxx4 என்ற எண்ணுக்கே அனுப்பு. வங்கியில் இருப்பவர் கணக்கு எண், பெயர் இவைகள் பொருந்துகிறதா என்று பார்த்துவிட்டுப் பணத்தை அனுப்பிவிடுவார்கள். இதையும் தாண்டி வங்கியில் ஏதாவது பிரச்சனை என்றால் உதவிட நீங்கள் இருக்கிறீர்களே.

பிஜூ: அப்படி இல்லை சரண். இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டளைப்படி, வங்கிகள் தங்களிடம் கொடுக்கப்பட்ட கணக்கு எண் அடிப்படையிலேயே நிதி மாற்றங்கள் செய்யவேண்டும். ஆகவே, நீ கொடுத்த தகவல்களில் ஏதாவது தவறு இருந்தால் முழுப் பொறுப்பும் உன்னுடையது.

சரண்: ஓஹோ! இருந்தாலும் எப்படியும் கடைசி கட்ட உதவியாளராக இந்திய ரிசர்வ் வங்கி இருக்கிறதே!.

பிஜூ: இல்லை. இந்த விஷயத்தைப் பொறுத்தவரை, கணக்கு வைத்திருப்பவரின் ஒப்புதல் இல்லாமல், இந்திய ரிசர்வ் வங்கி கூட கணக்கிலிருந்து பணத்தை மாற்ற முடியாது. ஆகவே கணக்குகளில் பண மாற்றம் செய்யும்போது நீங்கள் கவனமாக இருக்கவேண்டும்.

சரண்: உண்மையாகவா?
உங்களின் வழிகாட்டுதலுக்கு நன்றி.
நான் இப்போதே பரிவர்த்தனைக்குப் போகும் முன், கணக்கு எண் விவரங்களை சரிபார்த்து வாங்குகிறேன்.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

10. தோல்வியடைந்த பரிவர்த்தனைகளுக்கு இழப்பீடு

ஒரு வேலையாள் மகிழ்ச்சியுடன் வங்கியிலிருந்து வெளியே வருகிறார். விஜய் அவரைக் கடந்து போகிறார்.

விஜய்: நல்லது. ஆனால், உனக்கு இழப்பீடும் கிடைத்ததா?



வேலையாள்: இழப்பீடா?

விஜய்: ஆமாம். இந்திய ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கு அறிவுறுத்தல்களைக் கொடுத்துள்ளது. அதன்படி ஒரு ATM பரிவர்த்தனை தோல்வியடைந்து, கணக்கில் பணம் கழிக்கப்பட்டால், பற்று வைத்த அந்த நாளில் இருந்து 5 நாட்களுக்குள் அந்தப் பணம் கணக்கில் வரவு வைக்கப்படவேண்டும். அப்படி வங்கி செய்யாமல் போனால் ஒரு நாளைக்கு ரூ. 100 வீதம் இழப்பீடு கொடுக்க வேண்டும். உன்னோட விஷயத்தில் ஏறத்தாழ 2 மாதங்கள் ஆகிவிட்டது.

வேலையாள்: அப்படியா! உண்மையாகவா! நான் உடனடியாக என்னுடைய வங்கியிடம் புகார் செய்து இழப்பீட்டிற்கும் விண்ணப்பம் செய்கிறேன்.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

11. நேர்மறை பணம் அனுப்பும் முறைமை

சஞ்சு ஒரு கல்லூரியில் சேர இடம் கிடைத்துவிட்டது. அவளுடைய கல்லூரிக் கட்டணத்தை அவள் கட்ட வேண்டும். தன் அம்மா சாரதாவிடம் போகிறாள்.

சஞ்சு: அம்மா என்னுடைய கல்லூரிக் கட்டணம் ரூ.6,00,000/-. அந்தப் பணத்துக்குக் கல்லூரியின் பெயரில் ஒரு காசோலை கொடுங்கள்.

(சாரதா கையெழுத்திட்டு காசோலை தருகிறார்)

சாரதா: இதை பத்திரமாக எடுத்துச் செல். தொலைந்து போனால் அதில் உள்ள விவரங்களை மாற்றி யாராவது தவறாகப் பயன்படுத்தக் கூடும்.

சஞ்சு: கவலைப்படாதீர்கள் அம்மா. இந்திய ரிசர்வ் வங்கி, காசோலை பாதுகாப்பிற்காக "நேர்மறை பணம் அனுப்பும் முறை"யைப் புகுத்தியுள்ளது.

சாரதா: அது என்ன?

சஞ்சு: இந்த நேர்மறை பணம் அனுப்பும் முறையில் காசோலையில் உள்ள முக்கிய விவரங்களை, காசோலை அளிப்பவர் மீண்டும் உறுதி செய்யவேண்டும்.

சாரதா: இதற்கு எப்படி ஒருவர் வங்கியிடம் விவரங்கள் தரமுடியும்?

சஞ்சு: குறுஞ்செய்தி, மொபைல் செயலி, ATM, இணைய வங்கி வசதி இப்படி எந்த வழியாகவும் குறைந்தபட்ச முக்கிய விவரங்களைத் தரலாம்.

சாரதா: ரொம்பவும் நல்லது! ஆனால், எல்லா காசோலைகளுக்கும் இது கட்டாயமா?

சஞ்சு: இல்லை. வங்கி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ரூ.50,000 மற்றும் அதற்கு மேல் உயர் மதிப்புடைய காசோலைகளுக்கு வங்கி இந்த சேவையை கட்டாயமாக வழங்கிட வேண்டும். எனினும், கணக்கு வைத்திருப்பவர்களுக்கு, வங்கி தீர்மானத்தின்படி, ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு மேற்பட்டத் தொகைக்கான காசோலைகளுக்கு இந்த வசதி கட்டாயமாகும். வரம்பை உறுதிப்படுத்த உங்கள் வங்கியை தொடர்பு கொள்ளவும்.

https://cms.rbi.org.in/

சாரதா: சரி. ஆனால், வங்கிக்கு என்னென்ன விவரங்களைத் தரவேண்டும்.

சஞ்சு: காசோலையின் எண், தேதி, தொகை, பயனாளியின் சரியான பெயர் போன்றவை.

சாரதா: எவ்வளவு நாட்களுக்குள் இந்த தகவல்களை வங்கியிடம் தர வேண்டும்?

சஞ்சு: காசோலையை வங்கியில் சமர்ப்பிப்பதற்கு முன்பாக விவரங்களை அளிக்க வேண்டும். எனினும் உனது வங்கியிடம் விசாரிப்பது நல்லது.

சாரதா: இது சிறப்பானது. இதனால் காசோலை தொடர்பான மோசடிகளைத் தடுக்கலாம்.



மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

https://cms.rbi.org.in/

12. UPI 123PAY (யூபிஐ 123பே)

ஒரு நாள் சாரதா செய்தித் தாள் படித்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு தலைப்புச் செய்தியை ஆச்சரியத்தோடு படிக்கிறார்.

இந்திய ரிசர்வ் வங்கி, ஒருங்கிணைந்த பரிவர்த்தனை இடைமுகம் முறைமையை இணைய வசதி இல்லாத கைப்பேசிகளுக்கு தொடங்கியுள்ளது. அது UPI 123PAY என்று பெயரிடப்பட்டுள்ளது.

சாரதா: ஹை! சஞ்சு UPI 123PAY பற்றிக் கேள்விப்பட்டுள்ளாயா?

சஞ்சு: ஆம் அம்மா. UPI 123PAY என்பது ஒரு உடனடி பணம் அனுப்பும் முறைமை. ஸ்மார்ட் போன்கள் அல்லாத (இணைய வசதி இல்லாத) கைப்பேசிகளை பயன்படுத்தி பணம் அனுப்ப, UPI மூலம் பரிவர்த்தனைகள் செய்திட ஒருவருக்கு UPI அடையாளம் (ID) தேவை.

சாரதா: அப்படியா! எனக்கு ஒரு UPI (ID) உருவாக்க உதவி செய்.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

13. அடிப்படை வங்கி சேமிப்புக் கணக்கு

விஜய் தனது வீட்டில் சில வேலைகள் செய்வதற்காக வேலையாட்களை அமர்த்துகிறார்.

வேலையாட்கள்: ஹலோ சார். கான்ட்ராக்டர் எங்களை இங்க அனுப்பி வெச்சாரு. நாங்கள் சுவர் கட்டறது, பெயிண்டிங் வேலையை இன்னிக்கே முடிச்சுடுறோம்.

விஜய்: சரி. ஏன் இவ்வளவு தாமதமா வந்தீங்க? நீங்க 8 மணிக்கு வருவீங்கன்னு கான்ட்ராக்டர் சொன்னாரு. ஆனா இப்போ 11 மணி.



வேலையாள்: மன்னிச்சுக்குங்க சார். எங்கள் கிராமத்தில் இருந்து இங்கு வர 3 மணி நேரம் ஆகும். இன்னைக்கு எங்க பஸ்ஸும் தாமதமாயிடுச்சு.

விஜய்: பரவாயில்லை. உங்களுக்கு ரூ. 10000 தரணும்னு பேசியிருக்கேன். உங்கள் வங்கி கணக்கு விவரங்களைப் பகிரவும்.

வேலையாள் (தலையை சொறிந்து): சார் நீங்க பணமாகவே கொடுத்துடுங்களேன்.

விஜய் (குழப்பத்துடன்): ஏன்? உங்களுக்கு வங்கி கணக்கு இல்லையா?

வேலையாள்: எங்களிடம் போதுமான கல்வி அறிவு இல்லாததால் வங்கி கணக்கு இல்லை.



விஜய்: வங்கிகள் பேசிக் சேவிங்க்ஸ் பேங்க் டெபாசிட் (BSBD) கணக்கில் எந்த ஒரு குறைந்தபட்ச இருப்புத் தொகையின் அவசியம் இல்லாமல் பணம் எடுத்தல், ஏடிஎம் கார்டு போன்ற வசதிகளை வழங்குகின்றன.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

14. இளவர்களின் (மைனர்) வங்கிக் கணக்குகள்

ஓர் நாள் விஜயின் வீட்டிற்குப் பால்காரர் தனது 10 வயது மகன் சோட்டுவுடன் வருகிறார்.

விஜய்: ஹலோ! சோட்டு எப்படி இருக்கே?

சோட்டு: நான் நல்லா இருக்கேன் ஐயா.

விஜய் (பால்காரரிடம்): சோட்டு தன்னோட சேமிப்பைப் போட்டு வைக்க வங்கியில் அவனுக்கு கணக்குத் தொடங்கிவிட்டாயா?

பால்காரர் (புன்னகையுடன்): அவனுக்கு எந்த சேமிப்பும் இப்போதைக்கு இல்லை.

விஜய்: ஆனா நீ அவனுக்கு சேமிக்கற பழக்கத்தை கற்றுக் கொடுக்கணும்.

பால்காரர்: இப்போதான் அவனுக்கு10 வயசு ஆகுது.

விஜய்: ஆமாம். இளவரின் பெயரில், பெற்றோர் அல்லது சட்டரீதியான காப்பாளர் வங்கி கணக்குத் தொடங்கலாம். அந்த இளவருக்கு 10 வயது முடிந்த பின் அவரும் அந்தக் கணக்குப் பரிவர்த்தனைகளைத் தானாகச் செய்யலாம்.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

15. வங்கி டெபாசிட்டுகள் (வைப்புகள்) மீது காப்பீடு

சாரதா சமீபத்தில் பணி ஓய்வு பெற்றார். தனது ஓய்வூதியத் தொகையை ABC வங்கியில் போட்டு வைக்கத் திட்டமிடுகிறார். அவர் தனது தோழி டோலியை சந்தித்து இது பற்றிப் பேசத் தொடங்குகிறார்.

டோலி: சாரதா, அடுத்த தெருவில் இருக்கும் XYZ வட்டிக்கடைக்காரர்/ அடகுக் கடைக்காரர் நடப்பிலே எங்கும் இருப்பதை விட மிக அதிகமான வட்டி தருவதாகக் கேள்விப்பட்டேன். நீ ஏன் அவரிடம் உன் பணத்தைப் போட்டு வைக்கக் கூடாது?

சாரதா: ஆனால், நாம் அவரிடம் போடும் பணத்திற்கு பாதுகாப்பு கிடையாது. வங்கிகளில் போடும் பணத்திற்கு “டெபாசிட் இன்சூரன்ஸ் மற்றும் கிரெடிட் கேரண்டி கார்ப்பரேஷன்“ காப்பீடு செய்கிறது.

டோலி: அப்படியா! நான் வங்கியில் போடும் மொத்த வைப்பிற்கும் காப்பீடு உண்டா?

சாரதா: அதிகபட்ச காப்பீடு ரூ.5 லட்சம், ஒவ்வொரு வங்கியிலும் போடும் ரூ. 5 லட்சம் (வட்டியுடன் சேர்த்து) தொகைக்கு காப்பீடு உண்டு.



மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

16. இயக்கப்படாத கணக்குகள் மற்றும் கோரப்படாத வைப்புகள் (டெபாசிட்டுகள்)

ராஜூ ஒரு ஞாயிற்றுக் கிழமை தனது அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார்... அப்போது ABC வங்கியின் குறித்த கால வைப்பு ரசீது மங்கிப்போன நிலையில் அவர் கண்ணில் படுகிறது. அதில் தொகை ரூ.55,000, முதிர்வுத் தேதி அக்டோபர் 18, 2010 என்று குறிப்பிடப்பட்டிருந்தது.





மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

17. வீட்டு வாயிலில் வங்கிச் சேவை

ராஜூவின் அப்பா விஜய் தனது சகோதரர் அஜய் வீட்டிற்கு போகிறார்.

விஜய்: நீண்ட காலமாயிற்று! பதிவாளர் அலுவலகத்திற்குப் போய்க்கொண்டு இருக்கிறேன், அதனால் இங்கு வந்துவிட்டுப் போகலாம் என்று நினைத்தேன்.

அஜய்: ரொம்ப நல்லது. உட்கார்.

விஜய்: எப்படி இருக்கீங்க?

அஜய்: நல்லா இருக்கேன். ஆனால், வயதானதால் அதிகமான வெளிப்போக்குவரத்து இல்லை. மளிகை சாமான்கள் வாங்க, வங்கிக்கு இதுக்கு மட்டும்தான் வெளியில் சென்று வருகிறேன்.

விஜய்: வங்கிக்கா? உங்களுடைய வீட்டு வாயிலில் வங்கிச்சேவை அளிப்பதில்லையா?

அஜய்: வீட்டு வாயிலில் வங்கிச் சேவையா? அது என்ன?

விஜய்: மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள் வங்கிச் சேவை பெறுவதை எளிதாக்க, வங்கிகள் அவர்கள் வீட்டு வாயிலில் வங்கிச் சேவையை அளிக்கின்றன.

அஜய்: எனக்கு இதுபற்றி தெரியாது. பணம் டெபாசிட் செய்தல் /கணக்கிலிருந்து பணம் எடுத்தல் இதையெல்லாம் கூட வீட்டு வாசலில் வங்கிகள் வந்து செய்யுமா?

விஜய்: ஆமாம். பணத்தை வாங்கிக் கொண்டும் போவார்கள். எடுக்கவும் உதவி செய்வார்கள். கேட்பு வரைவோலை, KYC ஆவணங்கள் சமர்ப்பணம், உயிர்வாழ்சான்றிதழ் சமர்ப்பித்தல் ஆகியவற்றையெல்லாம் கூட செய்வார்கள்.

அஜய்: XYZ வங்கியின் கிளை இது போன்ற சேவைகளைத் தருமா? அதற்கான கட்டணங்கள் என்ன?

(விஜய் தனது போனில் தேடிப் பார்க்கிறார்.)

விஜய்: அந்த வங்கியின் இணையதளத்தில் தேடினேன். வீட்டு வாயிலில் சேவை அளிக்கும் கிளைகளின் பட்டியலில் உனது வங்கிக் கிளையின் பெயரும் இருக்கிறது. இதற்கான கட்டணங்களும் தெளிவாக அதில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பார்!

விஜய் தனது போனை அஜய்யிடம் காட்டுகிறார்.

அஜய்: ஆஹா, அற்புதம். நான் இந்த வசதியை இப்போதிருந்தே பயன்படுத்திக் கொள்கிறேன்.

விஜய்: நல்லது. வீட்டிற்கு வரும் வங்கியின் பணியாளர் / முகவரின் அடையாள அட்டை, அங்கீகாரக் கடிதம் ஆகியவற்றைச் சோதித்தறிய வேண்டும். அத்துடன் உன் வங்கிக் கிளையுடனும் பேசி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் நீங்கள் பெறும் சேவைகளுக்கான ரசீதுகளை மறக்காமல் பெற்றுக் கொள்ளுங்கள்.

அஜய்: நிச்சயமாக. ரொம்ப நன்றி. என்னுடைய சிரமங்களைக் குறைத்துவிட்டாய்.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

18. வங்கி அட்டைக்கு (கார்டுக்கு)டோக்கன்

ராணி அத்தை மளிகை சாமான்களுக்கான ஆர்டரை ஆன்-லைனில் செய்கிறார். அதற்குப் பணமும் அனுப்ப முற்படுகிறார்.

திடீரென பணம் அனுப்பும் பக்கம் வந்ததும் நிறுத்திவிட்டு, சஞ்சுவிடம் கேட்கிறார் ...

ராணி அத்தை: சஞ்சு! இந்த இணையதளம் என்னுடைய கார்டு, (வங்கி அட்டை) விவரங்களை சேமித்துக் கொள்வதாக சொல்லிக் கேட்கிறது. சில சமயங்களில் கார்டு விவரங்களை சேமித்தால், அதை மோசடியாளர்கள் பயன்படுத்தி பணம் எடுத்து விடுவார்கள் என்று கேள்விப்பட்டேனே!

ராணி அத்தை: இப்போது என்ன மாறிவிட்டது?

https://cms.rbi.org.in/

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

19. கார்டு (அட்டை) குறித்த கட்டுப்பாடுகள்

ஒரு நாள் பாட்டி ராஜூவின் வீட்டிற்கு வருகிறார்.

பாட்டி: உண்மையாவா?!. அதை எப்படி கட்டுப்படுத்த முடியும்?

சஞ்சு: இந்திய ரிசர்வ் வங்கி சில அறிவுறுத்தல்களை வங்கிகளுக்கு வழங்கியிருக்கு. உங்களோட கார்டை பயன்படுத்தி செய்யும் பரிவர்த்தனைகளைத் தொடங்கவோ / தடை செய்யவோ அதற்கு வரம்பு நிர்ணயம்/மாற்றம் செய்யவோ பலவகையிலும் வங்கிகள் வசதி செய்து தரவேண்டும்.

பாட்டி: ஆஹா, இது நல்ல பாதுகாப்பான செயல்முறைதான்.

சஞ்சு: ஆமாம். பாருங்க, நீங்க வெளிநாட்டு ஆன்-லைன் பரிவர்த்தனை எதுவும் செய்யப் போவதில்லை என்றால், அதைத் தடை செய்துவிடலாம். அதிகத் தொகைக்கு தொடர்பு ஏதுமில்லாமல் பரிவர்த்தனை செய்ய மாட்டீங்கன்னு நினைத்தால், அதுக்கு ஒரு வரம்பை அதில் நிர்ணயம் செய்யலாம். இதெல்லாமே சுலபம்தான்.

பாட்டி: இப்பவே வரம்பை நிர்ணயம் செய்து கார்டை உபயோகப்படுத்தத் தொடங்கறேன்.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

20. ATM-ன் “பின்”னை அவ்வப்போது மாற்றுதல்

ராஜு ஒருநாள் தனது புது ATM அட்டையின் நிலைப்பாடு பற்றி கேட்டறிய வங்கிக்குச் செல்கிறார்.



வங்கியாளர்: இல்லை! உங்களுக்கு அட்டையோடு அனுப்பப்படும் 'பின்'னை உடனடியாக மாற்றுவதுதான் பாதுகாப்பான பழக்கம். மேலும் அதையும் அவ்வப்போது மாற்றவேண்டும். ATM, மொபைல் செயலி, இணைய வங்கித் தொடர்பு இப்படி பல வழிகளில் 'பின்' எண்ணை மாற்றிக் கொள்ளலாம். எவரும் யூகிக்கக் கூடிய வகையில் 'பின்' எண்ணை உருவாக்காதீர்கள். உதாரணமாக – உங்களின் பிறந்த தேதி, மொபைல் எண்.... இதுபோன்றவை. மேலும் உங்களின் 'பின்' எண்ணை எங்கேயும் எழுதி வைக்காதீர்கள்.

ராஜு: அப்படியா! உங்களின் தகவலுக்கும், வழிகாட்டுதலுக்கும் நன்றி சார்.

நான் எனது 'பின்' எண்ணை அவ்வப்போது மாற்றுவேன். 'பின்' எண்ணை எங்கும் எழுதி வைக்கமாட்டேன். யாரிடமும் பகிர்ந்து கொள்ளமாட்டேன் என்பதில் உறுதியாக இருப்பேன்.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

21. வாரிசுதாரர் நியமன வசதி

ராணி அத்தை தனது மகனுடன் ராஜுவின் வீட்டிற்கு வருகிறார். வங்கியில் நகையும், பணமும் டெபாசிட் செய்ய ராஜுவிடம் உதவி கேட்டு வருகிறார்.

ராணி அத்தை: வங்கியில் பணம் மற்றும் நகை டெபாசிட் செய்ய எங்களுக்கு உதவி செய்கிறாயா?

ராஜு: நிச்சயமாக. உங்களுக்கு வங்கியில் ஏற்கனவே கணக்கும், பாதுகாப்புப் பெட்டக வசதியும் இருந்தால் இது ரொம்பவும் சுலபமான வேலைதான்.

ராணி அத்தை: ஆமாம். இரண்டும் இருக்கிறது.

ராஜு: ரொம்ப நல்லது. ஆனால் உங்கள் மகனை வாரிசுதாரர் ஆக்கிவிட்டீர்களா?

ராணி அத்தை: எனக்கு வங்கியில் கணக்கு இருக்கு. பாதுகாப்புப் பெட்டக வசதியும் இருக்கு. இதில் என்ன வாரிசு நியமனம்?

ராஜு: உங்களுக்கு அசம்பாவிதமாக ஏதேனும் நடந்து விட்டால், உங்கள் காலத்துக்குப் பிறகு உங்கள் கணக்கில் உள்ள பணத்தை எவரிடம் கொடுக்க வேண்டுமோ அவர்தான் உங்களின் வாரிசு.

ராணி அத்தை: ஓ! அது என்னுடைய காலத்துக்குப் பிறகுதானே, அதைப்பற்றி இப்போது நான் ஏன் கவலைப்படவேண்டும்?

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

https://cms.rbi.org.in/

22. பாதுகாப்புப் பெட்டகங்கள் ஒதுக்கீடு

கரண் கோடைகால விடுமுறையில் வெளியூர் செல்லத் திட்டமிட்டார். எனவே வீட்டில் விலை உயர்ந்த தங்க ஆபரணங்களை வைத்திருப்பது பாதுகாப்பானது அல்ல என்பதை உணர்ந்து, வங்கியில் உள்ள பாதுகாப்புப் பெட்டகத்தில் அவற்றை வைத்துவிட்டுச் செல்லத் தீர்மானிக்கிறார். ஆகவே, பாதுகாப்புப் பெட்டக வசதி பெறுவதற்காக அருகில் உள்ள ABC வங்கியின் கிளைக்குச் செல்கிறார்.

கரண்: சார், நான் உங்கள் வங்கியில் பாதுகாப்புப் பெட்டக வசதி பெற விரும்புகிறேன். எனது சேமிப்பு கணக்கை இங்கே வைத்துள்ளேன்.

வங்கியாளர்: நிச்சயமாக சார். அதற்கு நீங்கள் ரூ.2 லட்சத்திற்கான குறித்தகால வைப்புத் தொகை மற்றும் ஒரு காப்பீட்டு பாலிஸியும் கட்டாயமாக எடுக்க வேண்டும்.

(கரண் மிகுந்த மன வருத்தத்துடனும், ஏமாற்றத்துடனும் வங்கியிலிருந்து வீட்டிற்குப் புறப்படுகிறார். ஆனால் போகும் வழியில் தனது நண்பர் ராஜுவைச் சந்திக்கிறார். கரண் ஏன் வருத்தமாக இருப்பதாக ராஜு கேட்கிறார்.)

(கரண் வங்கியில் நடந்ததைக் கூறுகிறார்)

ராஜூ: பாதுகாப்புப் பெட்டக வசதியைப் பெறுவதற்கு வங்கிகள் எந்தவித நிபந்தனையும் விதிக்க முடியாது. மூன்று ஆண்டு வாடகைத் தொகை மற்றும் சில சந்தர்ப்பங்களில் பெட்டகத்தை உடைக்க நேரிட்டால் அதற்கான கட்டணத்தை கருத்தில் கொண்டு அந்த மொத்தத் தொகைக்கு உரிய குறித்தகால வைப்பு மட்டும் வங்கிகள் வாடிக்கையாளரிடமிருந்து அதிக பட்சமாக பெற அனுமதிக்கபடுகின்றன.

கரண்: பாதுகாப்புப் பெட்டக வசதி பெற விரும்பினால், இத்தகைய குறித்தகால வைப்பு இருக்க வேண்டும் என்பது வங்கிக் கணக்கு வைத்திருக்கும் நபருக்கும் கட்டாயமான ஒரு நிபந்தனையாகுமா?

ராஜூ: இல்லை. தேவையில்லை. நானும் என்னுடைய பாதுகாப்புப் பெட்டக வசதி ஒப்பந்தத்தை வங்கியிடம் புதுப்பிக்க வேண்டும். இந்திய ரிசர்வ் வங்கியின் தற்போதைய வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப வங்கிகள், நடப்பிலுள்ள பாதுகாப்புப் பெட்டக வசதி ஒப்பந்தங்களைப் புதுப்பிக்க வேண்டும்.

(கரண் உடனடியாக வங்கிக் கிளைக்குச் சென்று இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களைக் காட்டுகிறார்).

வங்கியாளர்: உங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்காக வருந்துகிறேன். பாதுகாப்புப் பெட்டக ஒதுக்கீட்டிற்காக உங்களின் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கொடுங்கள்.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட வரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

https://cms.rbi.org.in/

23. அழுக்கடைந்த / சிதைந்த கரன்சி நோட்டுகளின் பரிமாற்றம்

ஒரு நாள் ராஜூவின் அம்மா சாரதா வருத்தமாக இருந்தார்.

சஞ்சு: கவலைப்படாதே. கிழிந்த, அழுக்கான, சிதைந்து போன நோட்டுகளை எளிதாக மாற்றவும் செய்யலாம் அல்லது அதன் மதிப்பையும் அறியலாம்.

https://cms.rbi.org.in/



மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

https://cms.rbi.org.in/

24. இந்திய ரிசர்வ் வங்கி தொடர்பு மையம் இலவச தொலைபேசி எண் – 14448

ஒரு நாள் அருகில் உள்ள கிராமத்திலிருந்து ஐந்து நபர்கள் வங்கி சம்பந்தப்பட்ட விஷயங்களில் சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள விஜயை சந்திக்க வருகின்றனர்.

நபர் 1: விஜய் ABC பைனான்ஸ் கம்பெனி என்னுடைய தனிநபர் கடன் மீது அதிக வட்டி போட்டுவிட்டது. நான் கம்பெனியில் புகார் கொடுத்தும் எந்தப் பயனும் இல்லை. இனிமேல் என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை. நான் இப்போது என்ன செய்யட்டும்?

விஜய்: 14448

நபர் 2: சார் மூன்று மாதங்களுக்கு முன்பு ATM-ல் என்னுடைய பரிவர்த்தனை தவறாகி, வேறுகணக்கில் பற்று வைக்கப்பட்டு விட்டது. அதை வங்கி, என் கணக்கில் மீண்டும் வரவு வைக்கவில்லை. ஒரு மாதம் முன்பு எழுத்துப்பூர்வ புகாரை வங்கியில் கொடுத்தேன். வாடிக்கையாளர் சேவைப்பிரிவிற்குப் பலமுறை போனில் புகார் அளித்தேன். இன்னமும் என் பணம் வரவு வைக்கப்படவில்லை. நான் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை எப்படித் திரும்பப் பெறுவது? நீங்கள்தான் வழிகாட்ட வேண்டும்.

https://cms.rbi.org.in/

விஜய்: 14448

(மீதமிருந்த நபர்களும் இவர்களைப் போலவே வங்கிகளுடன் தங்களுக்கு இருக்கும் பிரச்சனைகளைத் தெரிவிக்கின்றனர்)

ஆனாலும் விஜய் 14448 என்று அந்த எண்களைத் திருப்பித் திருப்பிச் சொல்கிறார்.

விஜய்: 14448 என்பது இந்திய ரிசர்வ் வங்கியின் தொடர்பு மையத்திற்கான கட்டணமில்லா தொலைபேசி எண். இந்த எண்ணைத் தொடர்பு கொண்டு இந்திய ரிசர்வ் வங்கியின் சிஎம்எஸ் (CMS), புகார்ப் பதிவுத் தளத்தில், வங்கிகள் / வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மீதான புகார்களை அளிப்பதற்கு வழிகாட்டுதல் பெறலாம்.

நபர் 1: என்னால் ஆங்கிலத்தில் பேச முடியாதே!

விஜய்: கவலைப்பட வேண்டாம்.. ஆங்கிலம், ஹிந்தி தவிர பல்வேறு பிராந்திய மொழிகளில் இந்திய ரிசர்வ் வங்கி இந்த எண்ணில் தகவல்களை அளிக்கிறது. இல்லாவிட்டாலும் https://cms.rbi.org.in/ தளத்தில் புகாரைப் பதிவிட்டு, 14448- என்ற கட்டணமில்லா எண்ணில் தொடர்பு கொண்டு, சந்தேகங்களுக்கு விளக்கங்கள் பெறலாம்.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

25. CMS போர்ட்டலில் புகார் பதிவு செய்தல்

https://cms.rbi.org.in/

பாட்டி: நன்றி சஞ்சு. நான் இப்போதே உடனடியாக https://cms.rbi.org.in/ -ல் புகார் பதிவு செய்கிறேன்.

சஞ்சு: உங்கள் வங்கியிடமிருந்து 30 நாட்களுக்குள் பதில் வரவில்லை என்றாலோ அல்லது கிடைத்த பதில் திருப்திகரமாக இல்லை என்றால் மட்டும்தான் நீங்கள் RB-IOS-ல் புகார் செய்ய முடியும். அப்படி இல்லாதபட்சத்தில் அந்தப் புகார் தீர்வுக்கு ஏற்கத் தக்கதாக இருக்காது.

பாட்டி: தீர்வுக்கு ஏற்கத்தக்கது இல்லை! அப்படின்னா..... எந்தெந்த அடிப்படையில் அப்படி இருக்கும்?

சஞ்சு: முழுவிவரங்கள் இல்லாத புகார், மீண்டும் மீண்டும் செய்யப்படும் புகார், வக்கீல் மூலம் பதிவு செய்யப்படும் புகார், வேறொரு அமைப்பில் நிலுவையில் உள்ள புகார், ஆகியவை ஏற்கத் தக்கவை அல்ல.

பாட்டி: என்னுடைய புகாரின் நிலையை நான் தெரிந்து கொள்ள முடியுமா?

சஞ்சு: ஆம். https://cms.rbi.org.in/-ல் அல்லது 14448 தொலைபேசி எண்ணில் புகாரின் நிலையை தெரிந்து கொள்ளலாம்.

பாட்டி: நன்றி சஞ்சு. இது எனக்கு ரொம்ப உதவியா இருக்கு.

மேலும் விவரம் அறிய ஸ்கேன் செய்யவும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் ஏதேனும் இருப்பின் https://rbi.org.in தொடர்புக்குச் செல்லவும்.

भारतीय रिज़र्व बैंक

RESERVE BANK OF INDIA

இந்திய ரிசர்வ் வங்கி
நுகர்வோர் கல்வி மற்றும் பாதுகாப்புத் துறை (CEPD), RBI
http://cms.rbi.org.in